Registered No. M. 2330 "SIDDHANTHAM"

Vol. 40—No. 8

# சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 40 | பிலவங்க ஆவணி 1967 ஆகஸ்ட் | இதழ்

உள்ளுறை பக்கம்


| | |
|---|---|
| சிவப்பிரகாசமும் உரைகளும் ... | 201 |
| மெய்ப்பொருளாளர் மறைவு ... | 210 |
| ஆற்றூர் ... | 212 |
| மெய்யுணர்வு ... | 215 |
| ஆகாயம் ... | 218 |
| பரவச நிலை ... | 221 |
| சமாஜத் தேர்வு ... | 224 |
| ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் ... | 226 |
| திருமந்திரம் அரிய உரை ... | 228 |
| மதிப்புரை ... | 231 |


பத்திராசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,

உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

## செயற்குழுக் கூட்ட அறிக்கை

27—8—67 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜ அலுவலகத்தில் செயற்குழுக் கூட்டம் நிகழும், மாதக் கணக்கு சரிபார்த்தல், ஆண்டு விழா முதலிய பொருள்கள் பற்றி முடிவுகள் செய்யப்பெறும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் தவருது வருமாறு கேட்டுக்கொள்ளப்பெறுகிருர்கள்.

(செயலாளர்)

---

## பிற செய்திகள்

12—7—67 அன்று மாலையில் கோவை மாவட்டம் புன்செய்ப்புளியம்பட்டி அருள் நெறி மன்றத்தின் சார்பில் காஞ்சிபுரம் ஞானப்பிரகாசர் திருமட முதல்வர் தவத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய அடிகளார் அவர்கள் "கடவுள் வழிபாடு ஏன்" என்னும் பொருள் பற்றி விளக்கி விரிவுரை யாற்றினுர்கள்.

14—6—67 முதல் 9-7-67 முடிய 27 நாட்கள் மாலை யில் தவத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் திருப்புக்கொளியூர் அவிநாசியில் தங்கி "சிவஞான போத மெய்ந்நூலை 500 செட்டியார் மடத்தில் பாடமுறையில் போதித்தருளினுர்கள், பலர் இவ்வருளுரையைப் பெற்றுச்சமய அறிவு விளக்கம் பெற்றனர், 9—7—67 அன்று அவிநாசித் திருக்கோயிலில் சிவஞான போத வகுப்பு நிறைவு விழா நடை பெற்றது, முப்பது அன்பர்கள் சமய தீக்கையும் ஓரன்பர் விசேடதீக்கையும் பெற்றனர். சுவாமிகளின் சமயத்தொண்டு சிறக்க எல்லாம் வல்ல இறையருளும் துணை செய்வதாகுக.

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் திருக் கழுக்குன்றத்தில் ஆனி மகம் 22 ஆம் ஆண்டு திருமுறை இன்னிசைப் பெருவிழா 8, 9, 10, 11-7-67 நாட்களில் மிகச்சிறப்பாக நிகழ்ந்தது. நான்கு நாட்களிலும் தலவழிபாடு, திரும்முறைப் பேரவை, திருப்படி விழா, திருமுறைப் பெருவிழா முறையே நிகழ்ந்தன. மதுரை யாதீனம் சுவாமிகள் அருள்திரு அழகரடிகள் முதலிய பல பெருமக்கள் கலந்து சொற்பணி யாற்றினர்.

Reg. M. 2330

உ

சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 40 | பிலவங்க ௵ ஆவணி 1967 ஆகஸ்ட் | இதழ் 8

## சிவப்பிரகாசமும் உரைகளும்

(ஆசிரியர்)

சைவ சந்தான ஆசாரியருள் நான்காமவராகிய உமாபதி சிவாசாரியர் செய்த சிவப்பிரகாசம் தனிச் சிறப்புடையது; சிவஞான போதம் முதல் நூல், சிவஞான சித்தியார் வழிநூல், சிவப்பிரகாசம் சார்பு நூல் என்று ஆன்றோர் கூறினர்; இது நூறு திருவிருத்தங்களாலானது. சித்தாந்தத்தின் சாரம் இதுதான் என்று திட்டமாக வரையறை செய்து கூறுவது. சுருக்கமும், விளக்கமும் இதன்கண் உள்ளன. முந்தைய இருநூல்களில் சொல்லப்பட்ட பொருளை மட்டும் இது சொல்லாமல், அங்கு விடப்பட்ட பொருளை நன்கு தொகுத்துக் கூறுகிறது. பின்வந்த பல நூல்களுக்கு மூலமாகவும் உள்ளது.

மேலும், உமாபதி சிவாசாரியர் தில்லை வாழ் அந்தணருள் ஒருவரானமையால், வேதங்களையும், வேதாந்தத்தையும் நன்கு உணர்ந்து சைவ சித்தாந்தமானது "வேதாந்தத்தின் தெளிவு" என்று முரணில்லாமல் ஒற்றுமைப்படுத்திக் கூறுகிறார். இது இந்நூலில் காணப்படும் ஒரு தனிச் சிறப்பு. சிவப்பிரகாசம் செய்யப்பெற்ற காலம் கி. பி. 1306 என்று ஆன்றோர் கூறுவர். அவர் செய்த சங்கற்ப

நிராகரணத்தின் காலம் கி. பி. 1313 என்று திட்டமாகத் தெரிவதால், இக்காலக் குறிப்பு பொருந்தக்கூடியதே.

சிவப்பிரகாசமானது, விநாயகர் காப்புச் செய்யுள் ஒன்றும் பொது அதிகாரம் 50 எண்சீர் ஆசிரிய விருத்தங்களும் உண்மையதிகாரம் 50 அறுசீர் ஆசிரிய விருத்தங்களும் கொண்டது. பொது அதிகாரத்தில் பாயிரப்பகுதியும், சிவஞான போதச் சூத்திரப் பாட்டின்படி இரண்டு சூத்திரங்களும், உண்மையதிகாரத்தில் ஏனைய பத்து சூத்திரங்களும் அடங்கியுள்ளன. பாயிரப்பகுதி மங்கல வாழ்த்து என்ற பெயரோடு 12 பாடல்களை உடையது. பொருள்கள் முறையே நடராசப் பெருமான், சிவகாமியம்மை, விநாயகர், முருகன், சந்தானகுரவர், மறைஞான சம்பந்தர் ஆகியோர் வணக்கமும், நூற்பொருள், தீக்கை முறைமை (மூன்று பாடல்), நூல் மரபு, நூற்பெயர், அவையடக்கம் என்பனவுமாம். முதல் இரு சூத்திரங்களும் முறையே 6,32 பாடல்கள். பின் உண்மையதிகாரத்தில் பாயிரமாக ஒருபாடலும் சூத்திரங்களுக்கு முறையே 8,3,5,1,2,5,4,13 5,1 பாடல்களும், அறுதியில் நூற்கருத்து ஒரு பாடலும் அதிகாரி ஒருபாடலும் ஆக அமைந்துள்ளன.

இது சுருங்கிய நூலாயிருந்தமைபற்றி சமயசாத்திரம் படித்த பெரியோர் இதை நன்கு மனப்பாடம் செய்திருந்தனர். இதற்கு உறுதுணையாகப் பல கருவிளும் செய்யப் பெற்றிருந்தமை இந்நூலின் சிறப்புக்குச் சான்று. உமாபதியாரை யடுத்து மூன்ருவது ஆசாரியாராய் விளங்கிய சீர்காழிச் சிற்றம்பல நாடிகள் இதற்கு அடிவரவும் அதிகார அடைவும் 64 அடிகள் கொண்ட ஓர் ஆசிரியப் பாவால் செய்திருக்கிருர். அவருடைய மாணுக்கரான சம்பந்த முனிவரின அனுக்கிரகம் பெற்ற காவை அம்பலநாதத் தம்பிரான் சிவப்பிரகாசக் கருத்தைத் தொகுத்து 15 கண்ணிகள் கொண்ட ஒரு கலிவெண்பா பாடியிருக்கிருர். அன்றியும் இவரே சிவப்பிரகாசத்துக்குப் பாடல் தோறும் அதன் கருத்தை விளக்கி இரண்டு வரிகளால்

ஒரு கொளு பாடியிருக்கிறார். சாத்திரங்களுள் கொளு அமைந்த நூல் சிவப்பிரகாசம் ஒன்றே. பிரபந்தங்களுள் திருக்கோவையார் திருவாரூர்க்கோவை முதலிய பலவற்றுக்குக் கொளு செய்யப்பெற்றுள்ளது.

இங்ஙனம் காணும் சிறப்புக்கள் ஏனைய சாத்திரங்களுக்குச் சொல்லப்பெறவில்லை. உமாபதியாரைச் சிறப்பிக்கும் தனிப்பாடல்களும் பல. திருவாவடுதுறை யாதீனத்துப் பண்டார சாத்திரங்களுள் ஒன்றாகிய சுவாமிநாத தேசிகர் தசகாரியம் 20 ஆம் பாடலில் சிவப்பிரகாசப் பன்னிரு சூத்திரங்களுக்குரிய முதற்பாடல் என்ன தொடக்கம் உடையது என்பதை அடிவரவுபோல வரிசைப் படுத்திக் கூறுகிறது. இவ்வாறு பலவகையாகப் பாராட்டப்பெற்ற இந்தச் சாத்திர நூலுக்குப் பண்டைக் காலம் தொடங்கியே உரைகள் பல எழுந்துள்ளன. அவை பற்றிய விளக்கமான ஒரு குறிப்பை இதன் பின்னர்க் காணலாம்.

## 1. மதுரை ஞானப்பிரகாசர் உரை

இவர் காவை அம்பலநாதத் தம்பிரான் மாணாக்கருள் ஒருவரான சத்தியஞான பண்டாரத்தின் பல மாணாக்கருள் ஒருவர். சிவப்பிரகாசத்துக்கு இவர் ஒரு வியாக்கி" பொழிப்புரையாகச் செய்தார் என்று இவர் மாணாக்கரான மதுரைச் சிவப்பிரகாசர் எழுதுகிறார். இவ்வுரை இது காறும் கிடைத்ததில்லை. ஆனால் சமீபத்தில் வேலம்பாளையம் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டரவர்கள் தம்மிடம் இவ்வுரை உள்ளதென்று ஓர் உரையைக் கொடுத்தார்கள். இது காகிதப் பிரதி. ஓலை வடிவிலிருந்து இது பிரதி செயயப்பெற்ற காலம் கி. பி. 1831 என்று தெரிகிறது. இவ்வுரையினால் இவ்வாசிரியர் சித்தியார், பரபக்கத்துக்கும் ஓர் உரை செய்தாரென்று அறிகிறோம். அது கிடைக்கவில்லை. சிவப்பிரகாச உரை ஏடு சூரியனார் கோவிலாதீனத்துக்குரியது; முன்னிருந்த ஆதீனத்தலைவர் படிக்கும்படி இதைத் தமக்குக் கொடுத்ததாகக் கவுண்டரவர்கள் கூறினார்.

பிற சமயக் கருத்தை எடுத்துக் காட்டி மறுக்கும் இயல்பு இதனுள் அதிகமாகக் காணபபடுகிறது. பல இடங்களில் தெளிவான உரை; பல பொருள்களுக்கு இதனுள் நல்ல விளக்கமும் கிடைக்கிறது. இவ்வுரையை அச்சிடுவதற்கான முயற்சி நடைபெறுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறோம்.

## 2. மதுரை சிவப்பிரகாசர் பேருரை

இது மிக விரிந்தஉரை. முந்தைய ஆசிரியர்களையும் நூல்களையும்இவர் மிகவும் பாராட்டிக்கூறுகிறார். நூல்வரலாறு, உரை வரலாறு, சூத்திரத்துக்குத்தொந்தனை, அவதாரிகை, கொளு, விளக்கவுரை, நுட்பம், விதப்பு என்ற முறையில் இவர் உரை எழுதுகிறார். பெரும்பான்மை தம் கருத்துக்குத் திருமுறைகளையே மேற்கோள்காட்டுவது இவருடைய தனிச்சிறப்பு. காட்டும் நூல் எதுவென்று திட்டமாய்க் குறிப்பிட்டு எழுதுகிறார். வடமொழிப் பயிற்சியும் இவருக்கு உண்டென்று தெரிகிறது. தமக்குமுன் இருந்த ஆசிரியர்களையும் நூல்களையும் இவர் மிகவும் சிறப்பாகப் போற்றிக் கூறுகிறார். சிவானந்தமாலை, திருநெறி விளக்கம் முதலிய நூல்களைக் கூறும்போது, "இவை திருவருளைப் பெற்று அனுபவித்த அடியார்கள் வாக்கு" என்று கூறுகிறார். இவர் உரை 14–15 ஆம் நூற்றுண்டுகளில் ஏற்பட்ட சைவ சித்தாந்த இலக்கிய வளர்ச்சியை அறிவதற்கும், சமய ஆசாரிய பரம்பரையை உணர்வதற்கும், அக்காலத் தமிழ் இலக்கிய வரலாற்றை ஓரளவு அறிதற்கும் பெருந்துணையாயிருக்கிறது. பின்வந்த உரைகாரர்கள் இவர் வழியிலே சென்றவர்கள். பதிப்புக்கள் · 1. கொன்றை மாநகரம் சண்முகசுந்தர முதலியார் பதிப்பு 1872. 2. அவரே 1895 இல் இரண்டாம் பதிப்பு வெளியிட்டார். இது மெய்கண்ட சாத்திரங்களுக்கு 5 பெரிய புத்தகங்களாக வெளியிட்ட பதிப்பு. உந்தி, களிறு, சிவஞான போதம் முதல் புத்தகம்; சித்தியார் அறுவர் உரை அடுத்தமூன்று புத்தகங்கள்; சித்தாந்த அஷ்டகம் ஐந்தாம் புத்தகம். ஐந்தாம் புத்தகத்தில் சிவப்பிரகாசத்துக்கு

மதுரைச் சிவப்பிரகாசர் உரையை இவர் இரண்டாம் முறை வெளியிட்டதோடு'' ''வேறுரை'' என்று (பெயர் குறிப்பிடாமல்) அப்போது பலர் ஆட்சியில் இருந்த சிதம்பரநாத முனிவர் உரையைச் சேர்த்து வெளியிட்டார். 3. அடுத்த பதிப்பு, சைவசித்தாந்த மகா சமாசத்தின் மெய்கண்ட சாத்திர உரை, இரண்டாம் பதிப்பு. இதில் இம்மதுரைச் சிவப்பிரகாசர் உரை, மேற்கோள் குறிப்பு, உரையாசிரியர் வரலாற்றுக் குறிப்பு முதலியவற்ருேடு செப்பம் செய்து எம்மால் பரிசோதிக்கப் பெற்றது. உடனுகவே இது தனிப்புத்தகமாகவும் வெளியிடப் பெற்றது. 4. திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, இரண்டுபாகம், 1966 த. ச. மீனுட்சிசுந்தரம் பிள்ளை பதிப்பு.

## 3. அருள் நந்தி தேசிகர் உரை

இப்பெயர் கொண்ட உரையாசிரியர் எழுதிய விரிந்த உரை ஒன்று கரந்தைத் தமிழ்க் கல்லூரி ஆசிரியர் அடிகளாசிரியர் அவர்கள் பிரதிசெய்து கொடுத்தார்கள். உரையினுள் சிவாக்கிரயோகி செய்த சிவநெறிப் பிரகாசத்துக்கும் இதற்கும் ஒற்றுமைகள் பல இருப்பதாலும், நந்தி என்ற பெயரொற்றுமையாலும், சிவக்கொழுந்து தேசிகருக்கு இவர் வணக்கம் செய்வதாலும், அவ்வுரையாசிரியரான நந்தி சிவாக்கிரயோகியே இவ்வருள் நந்தி தேசிகராய் இருக்கலாம் என்று அடிகள் ஆசிரியர் தெரிவித்தார். மேலும் சித்தியாருக்குச் சிவாக்கிரயோகி உரை எழுதி இருப்பதால் அடுத்த சார்பு நூலாகிய சிவப்பிரகாசத்துக்கு அவர் மாணுக்கராகிய நந்தி சிவாக்கிரயோகிகள் உரை செய்தார் என்பது பொருந்தக்கூடியதே. இக்கருத்துக்கள் ஆராய்ச்சியில் இருந்து வருகின்றன. நூல் இன்னும் அச்சாகவில்லை.

## 4. சிதம்பரநாத முனிவர் உரை

இவர் சிவஞான சுவாமிகளின் மாணுக்கராய், அவரோடும் சோமசுந்தர குருவோடும் கூட திருவாவடுதுறை ஆதீனத்தில் இளைய பட்டத்தில் இருந்த திருச்சிற்றம்பல தேசிகரிடம் உபதேசம் பெற்ருர் என்று சொல்வார்கள். இவர் திருப்பாதிரிப்புலியூர்ப் புராணமும் பாடினுர். சிவஞான சுவாமிகள் 1785 இல் முத்தி அடைந்தார். எனவே சிதம்பரநாத முனிவரின் காலம் அதற்குச் சற்று முன் பின்னுக இருக்கலாம். ஆகவே உரையின் காலம் 1790 என்று கொள்வது பொருந்தும். மடங்களின் சார்பில் பலரும் இவ்வுரையையே பயின்ருர்கள்.

பதிப்புக்கள் : 1. 1895 இல் கொ. சண்முகசுந்தர முதலியார் சித்தாந்த அஷ்டகப் பதிப்பில் "வேறுரை" என்று குறிப்பிட்டுப் பதிப்பித்துள்ளவுரை இந்த உரை ஆகும். இதனைப்பல்லோரும் பயின்றுவந்தனர் என்று அவரே குறிப்பிட்டுள்ளார். 2. நாகலிங்கமுனிவர் பதிப்பு, 1897. 3. திருவாவடுதுறை ஆதீனப் பதிப்பு, 1953.

## 5. நல்லசிவதேவர் சிந்தனை உரை

இவ்வுரை 1934 சைவ சித்தாந்த மகா சமாஜ மெய் கண்ட சாத்திர முதல் பதிப்பில் திரு. அனவரத விநாயகம் பிள்ளையால் மிகவும் திருத்தமாகப் பரிசோதித்து அச்சிடப் பட்டது. அவர்களுக்கு மூலம் அரசாங்கத் தொன்னூல் நிலைய ஏட்டுப் பிரதி. அங்கு வேறுபல சித்தாந்த உரைகள் உள்ளன என்றும், யாவும் இதைத் தழுவியே வந்தன என்றும் அவர்களே குறிப்பிட்டுள்ளார்.

சென்ற நூற்றுண்டில் பக்குவமடையாத துறவிகளும் மாணுக்கரும் சாத்திர நூல்களைப் பாடம் கேட்டபொழுது, பழைய உரைகளைப் பிரதிபண்ணி வைத்துக்கொண்டு அவற்றைத் தம் ஆசிரியரிடம் பாடம் கேட்ட காலத்தில் நினைவுக்காக எழுதிவைத்த குறிப்புக்களும் சேர்ந்து பிற்

காலத்தில் சிந்தனை உரை என்று பெயர்பெற்றன என்று கருத இடம் உண்டு. நல்லசிவ தேவர் உரையில் பல நுட்பங்கள் உள்ளன. இதுவும் ஒரு சிறப்பான உரை.

இவர் தசகாரியம் செய்த திருவாவடுதுறை ஆதீனத்து மூன்று ஆசிரியர்களையும் பெரிதும் குறிப்பிடுவதால், அவர்களையடுத்து வந்த மாணாக்கராய் வாழ்ந்திருக்கலாமோ என்ற ஐயம் எழுகிறது. அம்பலவாணதேசிகரை எமதாசிரியர் எனறும், ஏனைய தக்ஷிணாமூர்த்திதேசிகர் சுவாமிநாத தேசிகர் இருவரையும் சேர்த்து "எமதாசிரியன்மார்" என்றும் இவர் பல இடங்களில் கூறுகிறார். இம்மூவரில் முதல் இருவர் காலம் கி. பி. 1600-25 க்குள் இருக்கலாம்; சுவாமிநாத தேசிகர் இலக்கண விளக்கம் செய்த வைத்திய நாத தேசிகர் காலத்தவர். பின் எல்லை 1650 ஆகும். ஆதலால் நல்லசிவ தேவர் காலம் சுமார் கி. பி. 1650 என்பதில் தடையில்லை.

11 ஆம் பாடலுக்கு இவர் எழுதியுள்ள உரையும் தொடர்களும் மதுரைச் சிவப்பிரகாசருரையை இவர் நன்கு பயின்று எழுதினார் என்று யூகிக்க இடந்தருகின்றன. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடலையும் இவர் குறிப்பிடுகிறார்.

நூலகத்து உள்ள குறிப்புக்களால் நல்லசிவ தேவர் சிவஞான சுவாமிகளுக்குப் பிற்பட்டவர் என்றும் ஆதலால் இவ்வுரையின் காலம் கி. பி. 1800 க்குச் சற்றுப் பின்னாக இருக்கலாமெனக் கருதவேண்டும் என்றும் பிள்ளையவர்கள் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்து அப்படியே கொள்வதற் கில்லை. சிவஞானசுவாமி பற்றிய குறிப்புக்கள் நூலகத்து இல்லை. நூலின் தொடக்கத்திலுள்ள வணக்கப்பாடல்கள் குருஞான சம்பந்தர், திருச்சிற்றம்பல தேசிகர், அம்பலவாண தேசிகர், துறைசைச் சங்கரமூர்த்தி முனிவர் என்போரைத் துதிக்கின்றன. இவை பிற்சேர்க்கை எனவே கருதவேண்டும்.

நல்லசிவ தேவர் மேற்கோட்பாடல்களில் குறிப்பிடத் தக்கவை சிற்றம்பல நாடிநூல்கள் அதிவீரராமன் பாடிய காசிகாண்டம்,பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணம் என்பன. (இம்முனிவர் காலம் 17 ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி.)

## 6. பழைய பொழிப்புரை

இது எம்மிடம் உள்ள ஒரு பழைய ஏட்டுப் பிரதி. மூலத்தில் உள்ள ஒரு சொல்லையும் விடாமல் மிகவும் தெளிவாக அடியொற்றி எழுதப்பட்ட தெளிவான உரை. ஏட்டில் கண்ட சில குறிப்புகளால்இதுமற்ருேர் ஏட்டைப் பார்த்துப் பிரதி செய்தது என்று தெரிகிறது. இதன் பின் எல்லை காலம், சுமார் 1800 என்று வரையறை செய்தல் பொருந்தும்.

## 7. திருவுருமாமலைச் சாரல் அடிகள் உரை

இவ்வுரையானது மிகவும் அழகாக அச்சிட்டு முதல் பதிப்பு 1908 இல் வெளியிடப் பெற்றது. விரிவான உரை. மீண்டும் இது 1962 இல் திருநெல்வேலியில் அச்சிடப் பெற்றுள்ளது. இரண்டாம் முறை பதிப்பித்தோர் அவ்வுரை யாழ்ப்பாணத்திலிருந்து திருநெல்வேலி திருநாவுக்கரசுசுவாமிகள் மடத்தில் வந்து தங்கி இருந்த இராமலிங்க சுவாமிகள் என்பவர் எழுதியதாகும் என்றும், அவர் மாணுக்கரான புதுக்குளம் இராமலிங்க சுவாமிகள் என்பவர்தாம் கேட்டறிந்தபடி பதிப்பித்தார் என்றும் யூகித்துக் குறிப்பிட்டிருக்கிருர். இவர் சிவஞானசுவாமிகள் இடத்து மிகுந்த ஈடுபாடு உடையவர் போலும்.

## 8. திருவிளங்கம் புதிய உரை

யாழ்ப்பாணத்து மு. திருவிளங்க தேசிகர், வெளிவந்த சிவப்பிரகாச உரைகளையும் பிறசாத்திரங்களான சித்தியார்—அறுவருரை போன்றவற்றையும் நன்கு ஆராய்ந்து புதிய உரை ஒன்று எழுதி வெளியிட்டார். அதன் இரண்

டாம் பதிப்பு 1941 இல் வெளியாயிற்று. இது மிகவும் திருத்தமாகவும் சாத்திரம் படிப்பவர்கள் எல்லாப்பொருள் களையும் நன்கு உணரவேண்டும் என்ற நோக்குடனும் செம்மையுற எழுதப்பெற்ற உரை.

இவையன்றி ஆங்காங்கு அச்சிடப்படாத வேறு பல சாத்திர உரைகள் ஏட்டுவடிவில் இருத்தல் கூடும். அன்பர்கள் அவற்றைப் பெற்றுத் தந்தாலும். இருக்குமிடம் பற்றிய செய்திகள் தெரிவித்தாலும், அவற்றைப்பெறவும் அச்சிடவும் உதவியாய் இருக்கும்.

மேற்குறிப்பிட்ட உரைகளில் அச்சில் வெளிவராதவை என்று குறிப்பிட்ட 1, 3, 6 எண்ணுள்ள மதுரை ஞானப் பிரகாசர் உரை, அருள் நந்தி தேசிகர் உரை, பழைய பொழிப்புரை ஆகிய மூன்றையும் அச்சிடுவதற்கான முயற்சி நடைபெற்றுவருகிறது. திருவருள் துணைசெய்க.

## ஒலிபரப்பு

(ஆசிரியர்)

பிப்ரவரி மாதம் பொதுத்தேர்தல் முடிந்தபின் ஆந்திரப் பிரதேசத்தில் மந்திரிகள் பதவி ஏற்றபோது பத்திரிகைகளில் வெளிவந்த ஒரு செய்தி மிக்க மகிழ்ச்சிதருவதாய் இருந்தது. அந்த நாட்டில் பதவி ஏற்றவர்களுள் இராமலிங்கராஜு என்பவரும் ஒருவர். அவருக்கு அறநிலைய இலாகா பிரித்துக் கொடுக்கப்பட்டபோது அவர், "நான் இதுவரையில் புலால் உணவு உண்டுவந்தேன். இப்போது கோயில்களை மேற் பார்வையிடும் பொறுப்பு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பொறுப்பை உத்தேசித்து நான் இன்று முதல் புலால் உண்ணுவதை ஒழித்துச் சைவ உணவே கொள்வதாகத் தீர்மானித்துவிட்டேன்" என்ற ஒருசெய்தி பத்திரிகைகளுக்கு வெளியிட்டிருந்தார். பொறுப்பேற்ற பின்னர் இவர் சைவராக மாறியிருப்பது சைவ மக்களுக்கு மிக்க மகிழ்ச்சி தரக் கூடிய ஒரு நற்செய்தி ஆகும்.

# மெய்ப்பொருளாளர் மறைவு

(அம்பை)

நமது சமாஜப் பொருளாளர் திரு. S. இராமசாமி இராஜா அவர்கள் 29-7-67 சனி காலையில் திடீரென இவ்வுலகைவிட்டு மறைந்தார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். சமாஜத்தின் சார்பில் சமாஜத் தலைவர் திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை முதலிய செயற்குழு உறுப்பினர்களும் பிற உறுப்பினர்களும் இறுதி வணக்கத்தைச் செலுத்தினர். சென்ற மாதமே தன் வாழ்க்கைத் துணைவியைப் பிரிந்து வருந்திய திரு. இராமசாமி அவர்களை இறைவன் நீண்டநாள் அமைதியற்ற நிலையில் இந்நிலவுலகில் விட்டுவைக்க விரும்பவில்லை போலும். திரு. இராமசாமி அவர்கள் தஞ்சைமாவட்டத்தில் கந்தர்வகோட்டையில் பிறந்தவர். தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கப் பள்ளியில் ஆரம்பக்கல்வி பயின்றார். அப்போதே நல்லாரிணக்கம் பெறும் வாய்ப்பையுற்றார். தஞ்சைமாவட்ட உரத்த நாட்டு உயர்பள்ளியில் எனக்குஓராண்டுமுன் வகுப்பு மாணவராய்ப் பயின்றார். இவர் அடக்கம், இன்சொல், இறையன்பு ஆகிய நற்குணங்களைத் தம்மகத்தே கொண்ட சான்றோராவர். அயரா உழைப்பாளர். கூட்டுறவுத் துறையில் தணிக்கையலுவலகத்தில் அலுவலாற்றிவந்தார்.

நம் சமாஜப் பொருளாளராய்ப் பொறுப்பேற்று நன்முறையில் பணியாற்றி வந்தார். ஆரவார நீர்மையற்றவர். அமைதியாகத் தொண்டாற்றி இன்பங்காணும் இயல்பினர். ஒல்லும் வகையான் பிறர்க்குத் துணைபுரிவதிலும் சளைக்காதவர். அத்தகைய பேரன்பரின் இழப்பு பொதுவாகத் தமிழுலகிற்கும் சிறப்பாகச் சைவவுலகிற்கும் ஈடுசெய்ய இயலாதது. 'வேண்டத்தக்க தறிவோய் நீ'' என்ற திருவாசகப்பாடலை யான் சில சொற்பொழிவுகளில் கூறும்போது அதுவே தனக்கும் மிகவும் விருப்பமான பாடல் எனக் கூறுவார் ''வேண்டி நீ யாதருள் செய்தாய் யானும் அதுவே வேண்டின் அல்லால்'' என்ற அருள் வாக்குப்படி இறைவன்

திருவுளப்பாங்கு அவரை இவ்வுலகைவிட்டு மறைக்க எண்ணியது போலும். அவர் ஆன்மா இறைவன் திருவடியில் அமைதி பெற்றிலங்க அவனருளையே வேண்டுகின்றோம். அவரைப் பிரிந்த அன்னார் குடும்பத்தினருக்கு சமாஜத்தினர் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவர் குடும்பம் மேன்மையுற்றிலங்க இறைவன் நல்லருள் புரிய அப்பெருமான் திருவடிகளையே வாழ்த்தி வணங்குகின்றோம்.

---

கவிராஜ பண்டிதர் செகவீர பாண்டியனார் அவர்கள் 17—6—67 சனிக்கிழமை இறைவன் திருவடி நீழலிலடைந்தின்புற்றார்கள் என்னும் செய்தியைச் சமாஜப் பேரன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். திரு. பண்டிதர் அவர்கள் சிறந்த சைவ சித்தாந்தப் பேரறிஞர்; அவரது புலமையூற்று நிறைவால் போந்த நூல்களே திருக்குறட் குமரேச வெண்பா போன்ற பல நூல்களாகும். முதுமை காரணமாக இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். அன்னார் குடும்பத்திற்கு நம் சமாஜச் சார்பில் நம் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர் ஆன்மா இறைவனின்னருளிலின்பமார்ந்திருக்க அவனருளையே வேண்டுகின்றோம்.

---

நம் சமாஜப் பேரன்பர் சென்னை திரு. P. S. வேதாசல முதலியார் அவர்கள் எதிர்பாராத நிலையில் திடீரென மார்படைப்பால் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம். அவர் தம் ஆருயிர் இறைவன் திருவடிக் கீழ் அமைதிபெற்றுச் சிறப்பதாகுக என அவனருளையே வேண்டுகின்றோம்.

# ஆற்றூர்

(மு. அ.)

இடம்! தஞ்சை ஜில்லா மாயூரம் தாலுக்காவில் வைத்தீஸ்வரன் கோவிலிலிருந்து பந்தணை நல்லூர் செல்லும் பஸ் பாதையில் $10\frac{1}{2}$ கல் அருகே தென்புறமுள்ள மண்ணியாற்றுப் பாலத்தைக் கடந்து 1 பர்லாங் தூரம் சென்றால் கோவிலை அடையலாம். ஊரை விட்டுக் கோவில் இப்பால் விலகி உள்ளது. பக்கத்தில் அர்ச்சகர் வீடு மட்டும்தான் உண்டு.

பெயர்: இவ்வூர் ஆற்றூர் என்ற பெயரில் வழங்குகிறது. இதை மந்தாரம் என்ற வைப்புத்தலம் என்று டாக்டர் சுவாமிநாத ஐயரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சாசனங்களில் திருவிடைத்திட்டை உடையார் கோயில் என்று சொல்லப்பட்டுள்ளது. சுவாமி சுவர்ணபுரீஸ்வரர்; அம்பிகை அபயாம்பிகை; தனியாக கயற்கண்ணி (மீனாட்சி) என்ற அம்மையின் கோவிலும் உண்டு. தலவிருட்சம் மந்தாரை.

கோவில்: பழங் கோயில். கருவறை முதலியன கல்லால் அமைந்தன. வெளிப் பிரகார மதில் சுவர்கள் இடிந்து விட்டன. எதிரில் அரக்காம்பல் படர்ந்த திருக்குளம் உள்ளது. இது சிவகங்கை எனப் பெயர்பெறும்; கோபுரம் இல்லை. வாயில் இடிபாடு; உள்ளே வடபுறம் வசந்த மண்டபம். நடராஜா சந்நிதியைத் தொடர்ந்து பிரகாரத்தில் குறுக்கே பெரிய மண்டபம் அமைக்கப்பெற்றுள்ளது. பின்புறம் திருமாளிகைச் சுற்று. அம்பிகைகோயில் வடபுறத்தில் தனியாகக் கிழக்கு நோக்கியவாறுஉள்ளது. கோயில் மணி சிறப்பானது.

மூர்த்தி: சுவாமி சந்நிதியில் தெற்கு நோக்கிக் கயற்கண்ணி கோயில் உள்ளது. துவார பாலகர் பெரிய பழைய உருவம். மேலிருகைகளிலும் நாகம் ஏந்தி உள்ளனர். கோஷ்டத்தில் நர்த்தன கணபதி; துவாரபாலகர் அருகே,

சிறு நர்த்தன கணபதியும் மற்ருெரு சிறு விநாயகரும் இருபுறமும் உள்ளனர். கோஷ்டதக்ஷிணுமூர்த்திக்கு மண்டபம் அமைக்கப்பெறுள்ளது. நிருதி விநாயகர், முருகன், சிறிய லக்ஷ்மி, கடைசியில் நால்வர். பின் கோட்டத்தில் திருவாசியோடு கூடிய திருமால் சண்டேசர், அஷ்டபுஜ துர்க்கை, வேறு இரு லிங்கங்கள், பைரவர் இருவர். ஒருவர் பக்கத்தில் இருபுறமும் இரண்டு நாய்கள், சூரியன், நாகலிங்கம். இங்கு நவக்கிரகம் இல்லை எல்லா உற்சவ மூர்த்திகளும் உள்ளனர். நடராஜர் திருவுருவம் அம்பிகையோடு இரண்டு உள்ளது. சிறிய மூர்த்தி கோயிலுக்குரியவர். பெரியமூர்த்தியும் அம்பிகையும் குளத்திலிருந்து 50 ஆண்டுகளுக்கு முன் கிடைத்ததாகக் கூறுகிருர்கள். இந்த மூர்த்தி சுமார் 3 அடி உயரமுள்ளவர். மிகச்சிறப்பான உருவப் பொலிவுடையவர். சிறந்த முகப் பொலிவு. வட்டமான திருவாசியில் 37 சுடர்கள் உள்ளன. காலில் உரோம அமைப்புக்கூட தெரியும்படி சிற்பம் உள்ளது. இந்தச் சிற்றூரில் இவ்வளவுபெரிய சிறப்புடைய நடராஜா இருப்பது வியப்பிற்கு இடமானது அவ்வாறே சிறப்பான வேறு இரு மூர்த்திகள் குறிப்பிடத்தக்கவர்கள். ஒன்று சண்டேசுவரர், மிகச் சிறப்பான கும்பிட்ட கோலம். மற்றது எல்லாவற்றிலுமேலான வில்லேந்திய முருகன் வடிவம், திரிபங்கியாக உள்ளது. சதுர்புஜங்கள்; வில் காணப்படவில்லை. சக்திவேல் உள்ளது. மிகவும் கவர்ச்சிகரமான திருவுருவம்.

வரலாறு : இங்கு பெருமான் கயற்கண்ணி என்ற பிராமணப் பெண்ணை மணம்செய்துகொண்டார். சமீபகாலத்தில் உற்சவம் நடத்த பொழுது கயற்கண்ணி வீட்டிற்குப் பெருமான் சென்று உற்சவம் கொண்டாடும் வழக்கமாக இருந்திருக்கிறது. மேலும் இங்கு விநாயகர், மந்தார விநாயகர், நந்தி தவளை முதலியோர் பூஜித்துப் பேறுபெற்றனர். இக்கோயிலைச் சோழேந்திரன் ஒருவன் கட்டினுன். அவன் விமானம் சுவர்ண விமானம். (சொர்ணயானம்) இது தடைப்படுகின்றமையால தலத்துக்குச் சொன்ன யான நிரோதனபுரம் என்றபெயருண்டு. அரசன் திருமாளிகையில் இருந்து சொர்ணம் வழங்கிய இடம் கல்யாண சோழபுரம்.

ஆற்றூர் கேசிங்கன் வட்டத்தில் உள்ளது. சோழ சேனுதிபதி ஒருவன் சாளுக்கிய மன்னன் மீது படையெடுத்துச் சென்று அவனை வெற்றிபெற்ருன் ஜெயசிங்கனை வெற்றிபெற்ற காரணத்தால் அவனுக்கு ஜெயசிங்க குல காலன் என்ற பட்டப் பெயர் கொடுக்கப்பட்டது. அதனுல் இவ்வூர் ஜெயசிங்க குலகால நல்லூர் என வழங்கலாயிற்று. இதுவே கேசிங்கன் என்று வழங்குகிறது.

பாடல்: மண்ணிப் படிக்கரை வாழ்கொளி புத்தூர்
வக்கரை மந்தாரம் வார ணசி
வெண்ணி விளத் தொட்டி வேள்விக்குடி
விளம்பர விராடபுரம் வேட்களத்தும்.

என்ற அப்பர் க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகப் பாடல் இவ்வூரைக் குறிப்பிடுகிறது என்று பெரியோர் கருதுவர். இப்பாடற்பகுதியில் உள்ள மண்ணிப்படிக்கரை வாள்கொளி புத்தூர், விளத்தொட்டி என்னும் ஊர்கள் இதைச் சார்ந்துள்ளன. மந்தாரவனேசுவரர் என்றும் சுவாமிக்குத் திருநாமம் உண்டு. இத்தலத்துக்கு மீனுட்சிசுந்தரம் பிள்ளை இயற்றிய 525 பாடல்கள் உடைய அழகான புராணம் ஒன்றும் உண்டு- இங்கு ஆசிரியர் இவ்வூரை மந்தார வனம் என்றே கூறுகிருர். தலவிசேடப்படலத்தில் நூறு தலங்களை ஆசிரியர் குறிப்பிடுகிருர்.

விழா : திருவாதிரை விழா மட்டுமே நடைபெறுகின்றது.

கல்வெட்டு : கர்ப்பக்கிரகத்தின் தெற்கு மேற்கு வடக்குச் சுவர்கள் முழுமையும் பல கல்வெட்டுகள் காணப்படுகின்றன இவற்ருல் இவ்வூர் விருதராஜ பயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டு இராஜ நாராயணச் சதுர்வேதி மங்கலம் என்றும், இங்கு கோயிலின் பெயர். திருவிடைத்திட்டை உடையார் கோயில் என்றும், இதன் பிடாகையான கீரனூரில் அவிமுக்தீசுவரம் உடையார் என்ற காசி விசுவநாதேசுவரர்கோயில் இருந்ததென்றும், அது இக்கோயிலால் பராமரிக்கப்பட்டதென்றும் அறிகிருேம்.

# மெய்யுணர்வு

—:( பரணி ):—

அறிவு என்பதற்குத் திருவள்ளுவர் கூறும் ஒரு விளக்கமாவது பொருள்களனைத்தினும் மெய்ப் பொருளைக் காணுந் திறன் என்பதாம்.

**எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு.**

ஈண்டு மெய்ப்பொருள்என்பதற்குஇறைவன் என்பதும், காண்பது என்பதற்கு பிரத்யக்ஷம் மட்டுமன்றி அனுபவமும் எனக்கொளல் வேண்டுமென்பதும் சான்ருேர் வாயிலாய் அறிந்ததே. மற்றும் பொருள் என்பதற்கு ஜடப்பொருள் அல்லது பிரக்ருதி (Physical Matter) மட்டுமன்றி இறை பொருள், அல்லது இறை அம்ஸங்கள் பொருந்திய(Purusha) பொருண்மையும் குறிக்கும் என்றும் இவ்விரு வகைப்பொருள்களையும் இணைக்கும் மாயை அல்லது பாசத்தினையும்(Desire Force) குறிக்கும் எனவும் கொளல் வேண்டும். அஃதாவது புருஷப்—பிரக்ருதி, மற்றும் இவ்விரண்டினையும் இணைக்கும் பாசம் ஆகிய ஏனைய பொருள்களையும் இச்சொற்ருெடர் குறிப்பதாகும். இம்மூன்று பொருண்மையை அருணகிரி நாதர் தம் திருப்புகழ்ப் பாக்களின் பெரும்பாலனவற்றுள் வகைப்படுத்திப் பாடி இறையனுபவம் பெற்றுள்ளார்.

ஐம்பொறிகட்கு மட்டுமே புலனுகக் கூடிய பௌதிக ப்ரபஞ்சப் பொருள்களின் எழில்மிகு தோற்றங்களிலெல்லாம் கூட இப்பொறிகட்கு அப்பாற்பட்ட மெய்ப்பொருளாம் இறைவனையே காண, அறிவுவழி சார்ந்த சிந்தனைச்சுடரைத் தூண்டி இறைவனைக் காட்டும் உலகின் எழில்மிகு மலைகள், வனங்கள், ஆறுகள், வயல்கள், நகரங்கள், கடல் முதலியனவும் அவை பயந்தவளங்கள் ஆகிய இவைபற்றிய வர்ணனைகளைத் திருப்புகழில் நயம்படக் கோத்திருக்கும் சில பகுதிகளையும் காணலாம்-

மேலும் மதி, கதிரவன், செண்பகம், தாமரை போன்ற மலர்கள் வரால்கள் துயில் வருபுனல் பெருக்காறுகள் வயலியல் கோனுடு, பிடியொடு களிறுகள், பேடை மட ஓதிமங்கள், முகிலுலவு நீலகிரி முதலியன 'காண் எங்கள் பழநி மேவு பெருமாளே' என்று இறைவனைக் காட்டுகின்றன!

மருமல்லி மாவன நீடிய பொழில்களெல்லாம் நம் வாழ்வு இறை வாழ்வாக மணம் வீசித்திகழச் செய்கின்றன!

மாங்கனியின் தேன், வாங்கு கையானையென ஈன்குலை வாழை, கண்டின் கனி சிந்துஞ்சுவை போன்றவை நாவின்ப ரஸமதாக இறையமுதை நமக்கு ஊட்டுவிக்கின்றன!

வலம்புரிச்சங்கு பம்புதல்போன்ற ஒலிகள் இறைவனது நாதஸ்வரூப தத்துவத்தை ஓதுவிக்கின்றன!

படர்நதி காவேரி சூழும் குளிர் வயலூர் போன்ற இடங்கள் நமது மெய்சிலிர்க்க இறைவனது அகலா ஈர அருளினைத் தொட்டுக்காட்டுகின்றன!

இவ்வைம்பொறி நுகர் பொருண்மைக்கும் ஆதாரமான மனத்தையே ஒரு பத்மமான பூவாக வைத்து இறைவனது திருவடிகளிலே அருணகிரியார் சமர்ப்பிக்கின்றாரென்றால் மனம் வழிச்செயல்படும் ஐம்பொறிகளும் காண்பார்க்கு இறைவனையே காட்டும் என்பதில் ஐயமுண்டோ!

'ஆசைகூர் பத்த னேன்மனோ பத்ம
மானபூ வைத்து நடுவேயன்—
பானநூ லிட்டு நாவிலே சித்ர
மாகவே கட்டி யொருஞான;
வாசம் வீசி ப்ரகாசியா நிற்ப
மாசிலோர் புத்தி யளிபாட—
மாக்ருதா புஷ்ப மாலைகோ லப்ர
வாளபா தத்தி லணிவேனோ.'

என்று அருணகிரியார் கூறும் நிலையை யாவரும் அடைந்து நன்மையுறுவார்களாக,

# ஒரு வேண்டுகோள்

சைவசமயப் பெரியார் திரு. சச்சிதானந்தம் பிள்ளை B. A. L. T. அவர்கள் எண்பதாண்டு நிறைவு விழா 15-8-67 ஆம் நாள் நிகழவிருக்கின்றது. அன்று காலையில் திருமயிலைக் கபாலீச்சுரத்தில் அபிடேகம், சிறப்பு வழிபாடு ஆதியன நிகழும். மாலையில் இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் பாராட்டு விழா நிகழும். மேலும் 27—8—67 மாலை திரு. பிள்ளையவர்களோடு தொடர்புபெற்ற எல்லா நிலையங்களின் சார்பிலும் திருமயிலை ரானடே ஹாலில் ஒரு சிறந்த பாராட்டு விழா நிகழும். அவ்விழாவில் சமாஜமும் கலந்து கொள்ளும். திரு. பிள்ளையவர்களின் எண்பதாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நம் செப்டம்பர் மாதத்திய சித்தாந்த இதழை திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் சதாபிடேக மலராக வெளியிடுவதாக சமாஜச் செயற் குழுவினர் தீர்மானித்துள்ளனர். ஆகையால் அவர்களோடு தொடர்பு பெற்ற சமாஜ அன்பர்கள் யாவரும் பிள்ளையவர்கள் வாழ்க்கையில் தாம் தாம் அறிந்த சிறப்பியல்புகளை ஆசிரியருக்கு சமாஜ முகவரிக்கு 25—8—67க்குள் எழுதியனுப்ப வேண்டுகின்றோம். ஒரே கருத்தினைப் பலரும் எழுதின் முதலில் எழுதப்பட்ட கருத்துக்கு இடந்தந்து மற்றையோர் எழுதியவற்றைக் குறைக்க ஆசிரியருக்கு உரிமை உண்டு. கூடியமட்டும் சுருங்கக்கூறி விளங்கவைக்கும் முறையை மேற்கொள்ளல் நன்று. (*துணையாசிரியர்*)

# ஆகாயம்

(மா. ப. தியாகராஜன் பி. ஏ.)

சென்ற மாத 'சித்தாந்தம்' மலர் 40 இதழ் 7 இல் 197ஆம் பக்கம உற்பத்திக்கிரமம் கூறிய இடத்து "அதே போல் (ஏனைய பூதங்களைப்போல்) ஆகாயம் இருகூறாக நின்று இயங்குவதை நாம் அறியமுடியவில்லை. எனினும் உயிர்சக்தி ஆகாயத்தினின்றும் எழுப்பப்படுகிறதென ஊகிக்கலாம்" என்று எழுதியுள்ளேன். Hindu என்னும் ஆங்கில வாரப்பதிப்பில் 9-7-77 இல் வெளிவந்த கட்டுரை "(Super mystery in the Sky)" காண்க. அதில் Dr. Oskar Klein என்னும் விஞ்ஞானி ஒருவர் எண்ணுவதாவது "ஆகாயத்தில் Matter (பருப்பொருள்) அதற்கு மாறாக (Non matter) ஒன்று என இருகூறாக இருந்து அவை ஒன்றுபடும்போது ஒருசக்தி வெளிப்பட்டு ஏனைய அப்படிப் பட்ட அணுக்களைப் பிரித்து விரிந்து நிற்கச் செய்வதால் இப்பிரபஞ்சம் விரிந்து விளங்குவதைக் காண்கிறோம்" என்பதாகும். ஓருருவாய் நின்ற பரசிவம் ஈருருவாய் சிவம் சக்தியுமாய்ப் பிரிந்து ஒன்றுபடுவதால் பிரபஞ்சம் விரிந்து இயங்கிக்கொண்டிருக்கிறது என்று கூறும் சைவ சித்தாந்த உண்மையைப் புரிந்துகொள்ளவும் நமது சித்தாந்தத்தில் நம்பிக்கை வரவும் மேற்படி விஞ்ஞானிகள் காணும் உண்மைகள் உதவுகின்றன.

> எரியாய் அரியாய் நிலம் நீரொடுதீ
> வளிகா யமென வெளிமன் னியதூ
> ஒளியாய் உனையே தொழுதுன் னுமவர்க்குக்
> கணியாய் கழிப்பா லையமர்ந் தவனே.

என்பது திருஞானசம்பந்தர் தேவாரம். ஐம்பூதங்களாகவும் இறைவன் விளங்குகிறான் என்று கூறப்படுகிறது. காற்று எங்கும் வியாபகமாக இருக்கிறது. ஆனால் அதன் இருப்பை அது வீசினால் அல்லது உணர முடிவதில்லை. அதை

உணரவேண்டில் அது வீசும்படியாகச் செய்யவேண்டும். அல்லது அதன் வெப்பத்தைக் குறைத்து அதைக் குளிர்ந்த தன்மையில் (Air Conditioned) உணர்கிறோம். அதேபோல் இறைவனை அவன் அருள்பாலிக்க உணரமுடியும். அவன் மனம் குளிர்ந்து அருள்பாலிக்க வேண்டும். எப்படி அவனருளை உணர்வது? என்று கூறுவதே சமயங்களாகும். காற்றை உணர்வதுபோல் ஆகாயப் பரப்பை நாம் உணர முடிவதில்லை. அதை ஒரு நீல உருவமாகக் காண்பதேயல்லாது வேறுவிதத்தில் அறிய முடிவதில்லை. அதைவிட நுண்பொருள் இறைவனாதலால் கண்டும், கேட்டும், தொட்டும், முகர்ந்தும், நுகர்ந்தும் அறிய முடியாதது அப்பொருள். ஏன் எனில் ஐம்பூதங்களுக்கும் அப்பாற்பட்டதாய் அவைகளுடன் விரவியும் அவைகளை இயக்கிக்கொண்டும் இருப்பது அப்பொருள். இதையே சைவசமயத்தில் இறைவன் வேறாய் உடனாய் உயிர்க்குயிராய் இருக்கிறான் என்று கூறுவர்—ஒவ்வொரு பூத இயல்புகளையும் பார்க்கில் இதன் உண்மை விளங்கும். தண்ணீர் பூமியில் விரவியும் வேறாயும், மண்ணை ஓரிடத்தினின்று மற்றோரிடத்துக்குச் செலுத்தி குவித்து இயக்கிக்கொண்டும் இருக்கக் காண்கிறோம். அதேபோல் காற்று நீரில் விரவியும், வேறாயும், நீரலைகளை இயக்கிக் கொண்டுமிருக்கின்றது. தீ பூமியில் தண்ணீரில் காற்றில் வெப்பமாகவும், அவற்றினின்று வேறாகவும் அவற்றை இயக்கிக்கொண்டிருப்பதைக் காணலாம். இறைவனை ஆதிபூதமெனின் அக்கினியை அந்தமான பூதமெனினும் அமையும். ஏனெனில் அதனுள் எதுவும் விரவி நிற்காது. இறைவனை அக்கினிப்பிழம்பாய் நிற்பவன் என்றும் கூறுவர். இறைபொருள் இவையாகவும் இவற்றுள் விரவி நிற்பதோடு ஆட்சியும் புரிகிறது. அதேபோல் மனிதர்களும் உலகத்தோடு உடனாயும், வேறாயும் உதவியாயும் வாழவேண்டும்.

பிருதிவிபூதம் தண்ணீரினல் அசைக்கப்படுகிறது. தண்ணீர் காற்றினல் அசைகிறது. ஆகாயம் சலனமுறக் காற்று அசைகிறதென்பர். ஆகாயத்தையும் அசைத்து அம்பரத்தில் நடனமிடுவது இறைபொருள். எனவே "அவனன்றி ஓரணுவும் அசையாதென்பர்."

பூமியில் பலவித உலோகங்களிருக்கின்றன. தங்கச் சுரங்கம், இருப்புச்சுரங்கங்கள் உள்ளன. எனினும் அவற்றைத் தூய்மைப்படுத்தி எடுக்கவேண்டும். சுரங்கங்களில் எடுக்கப்படும் மூலப்பொருளினின்றும் அந்தந்த உலோகங்கள் அல்லாத பொருள்களை உருக்கி எடுக்க வேண்டும். அதேபோல் உயிர் ஐம்பூத உடல், ஐம்புலன்கள், பஞ்சேந்திரியங்கள் மனம்புத்திசித்தம் அகங்காரம் ஆகிய கரணங்கள் நான்குடன் கூடி அதனுள்ளுள்ள அறிவு வெளிப்படாமல் இருக்கிறது. அது தூய்மையடையவேண்டில் மனம், உடல் உருகவேண்டும். "ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தத்தேன் சொரிந்து" என்று கூறுகிறார். மாணிக்கவாசகர். அதனேடுகூடிய முப்பத்தாறு தத்துவங்களும் நீங்கிய இடத்து உயிர் அறிவால் இறைவனை அறிய முடிகிறது. "அறிவால் அறிகின்றதலால் எவ்வாருருவர்க் கிசைவிப்பதுவே" என்று அருணகிரிநாதர் பாடியுள்ளதைக் காணலாம்.

ஐம்பூதங்களும் ஐம்புலன்களினின்று எவ்வாறு தொழிற்படுகின்றன என்று பின்னர் ஆராய்வாம்.

## ஆவணி மாத விசேட தினங்கள்

| | | |
|---|---|---|
| 16 | (1-9-67) | செருத்துணை நாயனர் விழா |
| 17 | (2-9-67) | அதிபத்த நாயனர் விழா |
| ,, | ( ,, ) | புகழ்த்துணை நாயனர் விழா |
| 18 | (3-9-67) | இளையான்குடிமாற நாயனர் விழா |
| 22 | (7-9-67) | விநாயக சதுர்த்தி விழா |
| 25 | (10-9-67) | குலச்சிறை நாயனர் விழா |
| 27 | (12-9-67) | குங்கிலியக்கலய நாயனர் விழா |

# பரவச நிலை

## (மு. அருணாசலம்)

கண்ட கண்கள் புனல் பாயக்
களிப்பாய் உள்ளம் கரையழிய
விண்ட மொழியின் நாக்குழற
விம்மி மேனி மயிர் பொடிப்பப்
பண்டை வசம் போய்ப் பரவசமாய்ப்
பரமானந்தத் தெளி நறலம்
உண்டு தெவிட்டா அருள் புரிந்தான்
கருவை வாழும் உரவோனே.

இது அதிவீரராம பாண்டியர் பாடிய குட்டித் திருவாசகம் என்னும் திருக்கருவைப் பதிற்றுப்பத்து அந்தாதியிலுள்ள ஒரு பாடல். திருவருள் வசப்பட்ட ஆன்மா தன் வசம் இழந்து பரவசப்பட்டு நிற்கின்ற நிலையை இப்பாடல் நன்கு கூறுகிறது.

'' ஆகம் விண்டு, கம்பம் வந்து, குஞ்சி அஞ்சலிக்கணே
ஆக என் கை, கண்கள் தாரை–ஆறு–அது ஆக'' என்றும்

நெக்கு–நெக்கு, உள் உருகி–உருகி,
நின்றும், இருந்தும், கிடந்தும், எழுந்தும்,
நக்கும், அழுதும், தொழுதும், வாழ்த்தி;
நானா விதத்தால் கூத்து நவிற்றி;
செக்கர் போலும் திருமேனி
திகழ நோக்கி; சிலிர்–சிலிர்த்து;

என்றும் மாணிக்க வாசகர் பாடுகிறார். இவ்வாறு ஓர் ஆன்மா தன்னுடைய கருவி கரணங்கள் யாவும் செயலற்று இறைவனுடைய அருளே கருவியாக அருட்காட்சியே கண்டு கொண்டிருக்கிற ஒரு நிலை அருள் வசப்பட்ட நிலை. ஆசாரியர், நாயன்மார் வரலாறு முழுமையும் இந்நிலைக்கு எடுத்துக் காட்டாகும். பராசக்தியின் அருள் ஒளி வடிவையே பார்த்திருந்த அபிராமிபட்டர் அமாவாசை அன்று அரசன் கேள்விக்கு விடையாக 'இன்று பௌர்ணமி திதி' என்று கூறிய

தும், இந்தப் பரவச நிலேயில் தான். சமீப காலத்தில் வங்காளத்தில் வாழ்ந்த இராமகிருஷ்ண பரமஹம்சரும் எந்த நேரமும் தம் வசம் இழந்து பராசக்தியின் அருள் வெள்ளமாகிய பரவச நிலேயில் இருந்தார் என்று அவர் சரித்திரம் கூறுகிறது.

இத்தகைய தொரு பரவச நிலே இக்காலத்தில் நம்மிடையே காணக் கிடைப்பது அருமை. கிடைத்தாலும் அதை உணரும் பக்குவம் நாம் பெறுதல் அரிது. எனினும் நாம் அறிந்த ஒரு சிறு வரலாற்றை இங்குக் கூருமல் இருக்க முடியவில்லே.

எங்கள் மகளிர் உயர்நிலேப்பள்ளி உமா மகளிர் உயர்நிலேப்பள்ளி என்ற பெயருடையது அங்கு சைவ தேசிக மரபில் வந்த ஒரு பெண் பதினெராம் வகுப்பில் படித்து வருகிருள். ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள். பிறவியிலேயே முருக பக்தி மிக்கவள் போலும். இதை நேரில் காண்கின்ற வாய்ப்புக்கள் பல வாரந்தோறும் கிடைத்தன இப்பள்ளியின் பெண்கள் அனேவரும் வாரம் ஒரு நாள் செவ்வாய்க்கிழமை மாலேயில் 6–30 மணிக்கு திருச்சிற்றம்பலத்திலுள்ள ஸ்ரீ நடனபுரீசுவரர் ஆலயத்தில் முறையாக வழிபாடாற்றி வருகிருர்கள். இந்தப் பெண்ணும் எல்லாரோடும் சேர்ந்து சென்று வருவது வழக்கம். இவ்வாறு வழிபடும் போது ஒவ்வொரு மூறையும் இவளிடத்தில் ஒரு பரவசநிலே ஏற்படுவதைக் கண்டு வருகிருேம்.

முருகன் சந்நிதியில் எல்லாப் பெண்களும் கூட்டமாக முருகன் தோத்திரம் பாடுவார்கள். பாடுகின்ற பாடல்கள் ஆடும் பரிவேல், கருவாய் உருவாய் என்ற கந்தர் அனுபூதிப் பாடல்கள், எதிரிலாத பத்தி, பத்தியால் யானுனே, அக

ரமுமாகி அதிகமுமாகி என்ற திருப்புகழ்ப் பாடல்கள் போன்றன. முதல் பாடல் தொடங்கின உடனே, அதிலும் சிறப்பாக உருக்கமாக யாரேனும் பாடின உடனே, கமலாவதி என்ற இப்பெண்ணுக்குப் பரவச நிலை கை கூடும். மயங்கி மெல்லச் சாய்ந்து விடுவாள். உடனிருப்போர் அவளை மெல்லத் தாங்கிப் படுக்க வைப்பார்கள். சுற்றிலும் நடப்பது ஒன்றும் அவளுக்குத் தெரியாது கண் மூடிக் கொள்ளும். எந்த பிரக்ஞையும் இராது. ஆனால் முகத்திலே மகிழ்ச்சி மிகுந்த ஒரு பர்வம் தோன்றும். ஒரு புதிய பிரகாசம் வெளிப்படும். இதயத்தில் ஊற்றெடுக்கிற ஆனந்தத்தின் பிரதிபலிப்பாக முகத்தில் உணர்ச்சி பாவங்கள் மாறி மாறி அரும்பி மலர்ந்து கொண்டே இருக்கும். காணுதஹோர் இன்பக் காட்சியைக் கண்டவர்கள் முகம் என்ன என்ன வியப்பையும் ஆனந்தத்தையும் காட்டுமோ, அத்தனையும் அவள் முகத்திலே காணலாம். இவ்வாறு பதினைந்து நிமிடம் நிகழ்ந்து கொண்டே இருக்கும். பிறகு பூர்ண அமைதி. முகமும் உடலும் எந்தச் செயலுமற்று அப்படியே எவ்வித உணர்ச்சியும் இல்லாமல் கட்டைபோல் கிடப்பாள். பின்னும் பதினைந்து நிமிடம் அல்லது அரை மணி நேரம் இவ்வாறு இருக்கும். அழைத்தாலும் தட்டி எழுப்பினாலும் அவளுக்குத் தெரியாது. பின் மெல்ல கண் விழிப்பதற்கு அடையாளமாகப் படுத்தபடியே கை கூப்பித் தொழுது 'முருகா முருகா' என்று பிதற்றுகிறாள். சில நிமிடங்கள் ஆனதும் கண்ணை விழிக்கிறாள். அப்போது தான் தானிருக்கும் சூழ்நிலை அவளுக்கு நினைவு வருகிறது. உடனே எழுந்து முருகா என்று சொன்னபடியே சந்நிதியில் சென்று நமஸ்காரம் செய்கிறாள். முன்னமே திருநீற்றுப் பிரசாதம் வாங்கியிருந்த போதிலும், திரும்பவும் குருக்களிடம் சென்று கை நீட்டுகிறாள். அவர் திருநீறு தந்தவுடன் வாங்கி அணிந்து, மற்ற பெண்கள் வரிசையில் போய் நிற்கிறாள். இதன் பின் தான் அவள் பழைய கமலாவதி.

இவ்வாறு செவ்வாய்க்கிழமை தோறும் நடந்து வருகிறது. ஒரு நாள் இக்குழந்தையை அழைத்து உன்னுடைய அனுபவம் என்ன என்று வினவினோம். 'எனக்கு ஒன்றும் தெரிவதில்லை. முருகன் பாடலைக் கேட்டவுடனே மனம் சிறிது

சுழலுகிறது. கால்கள் தள்ளாடுகின்றன. பின் நடப்பது தெரியாது. ஆனால் இடை இடையே மயில் மீது முருகன் எழுந்தருளி வருவதைக் காண்கிறேன்'' என்றாள். இது உண்மை. மயங்கி விழுந்த நிலையில் அவள் முகத்தில் தோன்றிய பாவங்களும், 'முருகா முருகா' என்ற உதட்டின் அசைவும், முருகனைக் கண்ட ஓர் அதிசயத்தினால் எழுந் தவை என்று எண்ணுமாறு தான் இருக்கின்றன.

இந்தப் பரவச நிலை மிக்க ஆச்சரியகரமாக உள்ளது. இது இப்பிறவியில் மட்டும் வந்ததாகக் கருதுவதற்கில்லை. தெய்வத்தை உணர்ந்து அதனிடம் பக்தி செலுத்துகின்ற பக்குவமான வயதும் இல்லை; இப்பெண்ணுக்கு வயது பதி னாறே. இந்த நிகழ்ச்சி இன்றும் நடைபெற்று வருகிறது.

## சமாசத் தேர்வுகளின் பாடத் திட்டம்

## இளஞ் சைவப் புலவர்

1. இலக்கணம் : நன்னூல் காண்டிகை (ஆறுமுக நாவலர்) யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம் (பொது வியல், பொருளணியியல் மட்டும்.)

2. இலக்கியம் : திருமுருகாற்றுப்படை, கந்தர் கலி வெண்பா, கந்தர் அனுபூதி, திருக்குறள் அறத்துப்பால் (பரிமேலழகர் உரையுடன்) சுந்தரர் தேவாரம் முழுவதும்.

3. சாத்திரம் : திருவுந்தியார், திருக்களிற்றுப்படி யார், உண்மை விளக்கம், திருவருட்பயன், கொடிக்கவி, வினாவெண்பா.

4. உரைநடை : சைவத்தின் சமரசம் (திரு. வி. க.) வாகீசர் அல்லது மெய்யுணர்வு (சிவக்கவிமணி) பட்டினத் தார் வரலாறும் நூலாராய்ச்சியும், தாயுமானவர் வரலாறும் நூலாராய்ச்சியும் (கா.சு. பிள்ளை M.A.M.L.) பெரியபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் (ஆறுமுகநாவலர்)

## சைவப் புலவர்

**1. இலக்கணம் :** தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியம்) சொல்லதிகாரம (சேனாவரையம்) பொருளதிகாரம் (இளம் பூரணம்) தருக்கசங்கிரகம (சிவ ஞான முனிவர்.)

**2. இலக்கியம் :** பெரிய புராணப் (திருநாவுக்கரசர் புராணம் முழுவதும்), சம்பந்தர் தேவாரம் முழுவதும், திருவாசகம் முழுவதும், ஒன்பதாந் திருமுறை முழுவதும்.

**3. சாத்திரம் :** சிவஞானபோதச் சிற்றுரை, சிவ ஞான சித்தியார் சுபக்கம் (சிவஞான முனிவர் உரை) சிவப் பிரகாசப், சங்கற்ப நிராகரணம்.

**4. உரைநடை :** சைவ சித்தாந்த ஞானபோதம் (மறைமலையடிகள்) சிவஞான சித்தியார் ஆராய்ச்சி, (ந. சிவ குருநாத பிள்ளை) திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந் தமே (க. வச்சிரவேல் முதலியார்) சிவஞான முனிவர் உரை நடை நூல்கள், பெரியபுராண சூசனம் (ஆறுமுக நாவலர்.)

---

## சமாஜத் தேர்வு எழுதுவோர் கவனிக்க

தேர்வு எழுத விரும்புவோர்பாடத்திட்டத்திற்குறித்துள்ள நூல்களை நன்கினிது படித்துப் பயிறசிபெற்றிருத்தல் வேண்டும். முதல் வகுப்பில் தேர்ச்சிபெறும் இளைஞர்கு அதறகென அன்பரொருவர் வழங்கிய மூலப்பொருளினின்று வரும் வருவா யைக் கொண்டு பரிசு வழங்கப் பெறும். இளஞ் சைவப் புலவர் தேர்வக்கு ரூபாய் மூன்றும் சைவப் புலவர் தேர்வுக்கு ரூபாய் நான்கும் பதிவுக் கட்டணம் ஆகும். விண்ணப்பம் அனுப்பும் இறுதி நாள் 30-9-67. தேர்வு நவமபர் மாதம் மூன்ருட சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும்.

# ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்

## (பெயர் விழையான்)

தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு ஜில்லாக்களிலும் நூற்றுக்கு மேற்பட்ட அரசாங்கப் பயிற்சிப் பாடசாலைகள் நடைபெறுகின்றன. இங்கு ஆசிரியர்கள் இரண்டு வருஷ காலப் பயிற்சி பெறுகிறார்கள். ஒவ்வொருவருக்கும் மாதம் 18 ரூபாய் அரசாங்க உதவி உண்டு. பயிற்சி இரண்டுதரம். ஒன்று பள்ளி இறுதி நிலை கடந்தவர்களுக்கு; (S.S.L.C) இது செகண்டேரி கிரேடு அல்லது சீனியர் கிரேடு என்று பெயர்பெறும். மற்றது பள்ளி இறுதி நிலை தாண்டாதவர்களுக்கு: இது எலிமெண்டரி ஹையர் கிரேடு அல்லது ஜூனியர் பேசிக் என்று பெயர்பெறும். மேற்குறிப்பிட்ட அரசாங்கப்பாடசாலைகள்போகத்தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிகள் மிகப்பல. இவற்றுள் கிறித்தவப் பள்ளிகளே மிக அதிகம். அப்பள்ளிகளில் கிறித்தவர்களே மிக அதிகமாகச் சேர்க்கப்படுகிறார்கள். அங்கு குறித்த வழிபாடும் கிறித்தவ ஒழுக்கமும் வலியுறுத்தப்படும். ஆனால் ஹிந்து பள்ளிகள் மிகவும குறைவு. இங்கு வழிபாடும சமய ஒழுக்கமும் வற்புறுத்தப்படுவதில்லை. இந்தநிலையில் எதிர்காலத்தில் ஆரம்பநிலைக் கல்வி எந்தநிலையில் போகும் என்பதை இந்துக்கள் உணர்ந்து பார்க்கவேண்டும். அரசாங்கப் பள்ளிகளில் சமயச்சார்பற்ற அரசாங்கம் என்ற பெயரில் சமய போதனை, சமய ஒழுக்கம் இவற்றிற்கு இடமே இல்லை. சில தனிப்பட்ட ஆசிரியர்கள் மட்டும மாணுக்கருக்குப் பயந்தும், அரசாங்கத்துக்குப் பயந்தும், உடனுள்ள ஆசிரியருக்குபயந்தும், சமய வழிபாட்டை ஓரளவு வற்புறுத்தி வருகிறார்கள். இத்தனை அச்சத்தால் அரசாங்கப் பள்ளிகளில் பலன் மிகவும் குறைவு. ஆகவே பெரும்பான்மையான பள்ளிகள் கிறித்துவப் பள்ளிகளாக இருக்கின்ற நிலையில் எதிர்காலத்தின் விளைவு எப்படி இருக்குமென்று எண்ணவே மனம் அஞ்சு

கிறது. ஏராளமான கிறித்துவ ஆசிரியர்கள் சமய பக்தி நிரம்பியவர்களாக, அதில் பயிற்சி பெற்றவர்களாக, வெளி வருவார்கள். பல இந்துமத ஆசிரியர்கள் சமயப் பயிற்சி இல்லாமல் சமயபக்தி இல்லாமல் வெளிவருவார்கள். ஆதலால் சில நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் கல்விநிலையங்களில் சமயப்பயிற்சி இருந்தால் அது கிறித்தவ சமயப்பயிற்சியாகவே இருக்கும்.

இவ்வாண்டு உள்ள நிலைமையைப் பின்வரும் புள்ளி விவரம் காட்டும்.

## தனிப்பட்டோர் பயிற்சிப் பள்ளிகள் மட்டும்

| பள்ளி விவரம் | பள்ளி இறுதி நிலைக்குப் பின் | | | | பள்ளி இறுதி நிலைக்கு கீழ் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | செகண்டரி; | | சீனியர் பேசிக் | | ஹையர்; | | ஜூனியர் பேசிக் | |
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| மொத்த பள்ளிகள் : | 1 | 6 | 20 | 29 | 1 | 3 | 9 | 7 |
| கிறித்துவம் | – | 5 | 16 | 24 | – | 2 | 8 | 6 |
| நாத்திகம | 1 | 1 | — | — | 1 | 1 | - | – |
| மற்றவை | - | - | 4 | 5 | — | — | 1 | 1 |
| **இவ்வாண்டு புதுச்சேர்க்கை** | | | | | | | | |
| கிறித்துவம் | | 5 | 16 | 24 | | 2 | 5 | 6 |
| நாத்திகம் | 1 | 1 | | | 1 | 1 | | |
| மற்றவை | | | 2 | 5 | | | 1 | 1 |

இந்து மக்கள். சைவமக்கள், இப்புள்ளி விவரங்களை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். எதிர்காலத்தில் இந்த நிலையில் நம் கல்வி முறையில் பிள்ளைகளுக்குச் சைவம்பற்றியும் இந்து சமயம்பற்றியும் ஏதேனும் தெரிய இடம இருக்கின்றதா என பதை நம் பெருமக்கள் சிந்திப்பார்களாக.

கிறித்துவ சமயப் பாதிரிகள் முன்வந்து முற்காலத்தில் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி ஆரம்பித்தார்கள். ஆனால் இந்து சமயத்தில் அவ்வாறு முன்வரவில்லை. அவர்களுக்கு பிரிட்டிஷ் அரசாங்கச் சலுகை நிரமபக்கிடைத்தது தங்கள் பள்ளிகளை நன்கு நிலைநாட்டிக் கொண்டார்கள். இந்து மக்கள் பள்ளி நடத்த முன்வரவில்லை. வந்தோருக்கும் இன்று அரசாங்க ஆதரவு திருப்திகரமாயில்லை.

# திருமந்திரம் அரிய உரை

(அம்பை சங்கரனர்)

உச்சி யின்மெல் லொளியை யுணர்வொடும்
பச்சைப் பசுமட் கலத்திடைப் பாச்சிடில்
அச்சினி லங்கியாய் ஆதார மாறினும்
தச்சுற நின்ற சதாசிவந் தானே.

(என்பது) ஆதித்தய ...... ......... ..... செல்லாத படியாலே இராபாவங் குலையாத படியுமாய்க் குருக் காட்டின வன்பு மறியப்படுவதுமான சுழிமுன்னடியிலே யாகுஞ்சனத்தாலே மான வத்தைப் பாச்சிடில் மூலாக்கினி மண்டல செயம் பண்ணி சதாசிவனேடே கூடி யுச்சியிலாக இருக்கிற பரம சிவனேடே பொருந்தியிருக்குமே என்று ஆகுஞ்சனத்தின் பெருமையை வியந்து சொல்லியது.

உச்சியின் மெல்லொளியை என்றது மேலான உச்சியை வில்லாகவுடைய சொயம்பிரகாசத்தை என்றபடி.

உணர்வொடும் என்றது பரமகுருவருளிச் செய்தவறி வோடே சமாகுஞ்சனமாகிய வறிவோடே என்றபடி. பச்சைப் பசுமட் கலத்திடைப் பாச்சிடில் என்பது ஆதித்தா ........... செல்லாதபடியாலே இரபாவமுங் குருவறிவிக்கப் பின்பறிகை யாலே புதுமையையுமுடைய சுழிமுன்னடி யகத்தே தேசோ மயமான பிரணவத்தை வாயுவாலே புகுத விடிலென்றபடி.

அச்சினி லங்கியாய் ஆதாரமாறினுந் தச்சுற நின்ற சதாசிவந் தானே என்றது இந்தச் சரீரத்துக் கச்சாணியா யிருந்துள்ள முதலாதாரத்திலே நிலைபெற்ற வக்கினி யாதாரங் களாறினு முருவிச் சதாசிவனேடொட்டி யாணியான பரமசிவ னேடே பொருந்தி நிற்கு மென்றவாறு,

(குறிப்பு) இச்செய்யுள் சமாஜப் பதிப்பு முதலிய பிற திருமந்திர நூல்களில் காணப்பெற வில்லை.

ஓங்கிய வங்கியு மொண்சுழு னைச்செல்ல
வாங்கி யிரவி மதிவழி யேறிடத்
தாங்கு முலகங்கள் ஏழுந் தரித்திட
வாங்கது சொன்னோ மருவழி யோற்கே.

(என்பது) வளரப்பட்ட மூலாக்கினியைச் சுழிமுன்னுடியிலே செல்லும்படி ஆகுஞ்சனத்தாலே வளர்த்து ஆதித்தர் சந்திரர்கள் இருக்கிற வழியே யாக்கினையளவான ஏழு மண்டலமும் தரிக்கும்படியாகச் செல்லுகையே வழிபாடென்று அனுதியுபதேசமென்றவாறு.

(குறிப்பு) இச்செய்யுள் சில பிரதிபேதங்களுடன் சமாஜப் பதிப்பு முதலிய வெளியீடுகளில் காணக் கிடைக்கின்றது. அது வருமாறு :—

ஓங்கிய அங்கிக்கீழ் ஒண்சுழு னைச்செல்ல
வாங்கி இரவி மதிவழி ஓடிடத்
தாங்கி உலகங்கள் ஏழுந் தரித்திட
ஆங்கது சொன்னோம் அருவழி யோர்க்கே.

என்பதாம்.

அந்தத் துயனும் பிரளையத் தங்கியும்
உந்திப் பிராணனும் ஆகிய மூவொளி
விந்துக்கோ ணுதமும் மேலே எழும்பிடிற்
சிந்திக்கத் தீயுஞ் சிவனவ னுமே.

(என்பது) சோம சூரியாக்கினிகளாகிற தேசத்து மூன்றையுமாகுஞ்சனத்தாலே கூட பிரணவத்தை வளர்க்கில் நினைத்தவற்றைக் கொடுக்கிற பரமசிவன்தானவன் என்னும்படியாயிருக்கலாமென்று ஆகுஞ்சனத்தின் பெருமையை வியந்து சொல்லியது.

அந்தத்துயனும் என்றது புருவமத்தியத்தை விருப்பாகவுடைய சந்த.......... சுகுட்டாவுமென்றபடி.

பிரளையத் தங்கியும என்றது சங்காரத்திலே தொழிலான அக்கினியையும் என்றபடி.

உந்திப்புராணனும் ஆகியமூவொளி என்றது சரீரத்துக்கு உயிரென்று சொல்லப்படுவதாதித்தனை யாதலில் இவ்வாதித்தனுட்பட்ட மூன்று தேசத்தும் என்றபடி.

விந்துக்கோ நாதமு மேலே எழும்பிடில் என்றது விந்து வோடே கூடின பிரணவத்தை ஆகுஞ்சனத்தாலே மேலே வருவிக்கிலென்றபடி.

சிந்திக்கத் தீயுஞ்சிவனவனுமே என்றது இவ்வழிபாடு நடக்கவல்லார்க்கு அன்பர் நினைத்தவற்றை யளிக்கவல்ல பரமசிவன் தானுயிருக்கலாமே யென்றவாறு.

(குறிப்பு) இச்செய்யுள் சமாஜப் பதிப்பு முதலிய பிறதிரு மந்திர நூல்களுள் காணப்பெறவில்லை.

முகந்திருந் துள்ளே முழைபுக நோக்கில்
அகந்திருந் தைவரு மாங்கிடஞ் சேர்வர்
சகந்திருந் தும்பர்கள் தம்முடன கூடி
யுகந்திருந் தாலு முடம்பழி யாதே.

(என்பது) சிரோமத்தியமான முழையினுள்ளே யாம்படி புறம்பே முகமாகப் பாய்கிற வாயுவை நோக்குகிற பஞ்சேந் திரியங்களும் இவ்விடத்தேயாய்ச் சரீரம் நிலைபெற்றுப் பூமி யிடத்திலே வியாபரித்துப் பின்புந்தேவர்களுடனே பொருந்திச் சகலலோகங்களும் அழிந்த காலத்திலேயும் அழியாமல் இருந்ததன்றே யென்று வாயுவின் ஒடுக்கத்தை வியந்து சொல்லியது.

முகந்திரிந்துள்ளே முழைபுகநோக்கில் என்றது புறம்பே முகமாகப் பாய்கிற வாயு திரித்துக் கபால மத்தியமாகிற முழையிலே யாம் படியாகக் கருதுவார்க் கென்றபடி.

அகந்திருந்தை வரு மாங்கிடஞ் சேர்வர் என்றது இப் படிச்செய்யில் இவ்விட மெய்தும்படி ஞானேந்திரியங்களும் இவ்விடத்தே சேர்வர் என்றபடி.

சகந்திருந் தும்பர்கள் தம்முடன் கூடி என்றது தனக்கு வேண்டுங்கால் தம் பூமியிடத்திலே வியாபரித்துப் பின்புந் தேவர்களுடனே கூடிக்கொண்டென்றபடி. உகந்திருந்தாலும் உடம்பழியாதே என்றது சகல லோகமுமழியும்படி சங்கார காலமானாலும் சரீர மழியாதென்றவாறு

(குறிப்பு) இச்செய்யுள் சமாஜப் பதிப்பு முதலிய பிற திருமந்திர நூல்களுள் காணப்பெற வில்லை.

ஆகவே இவ்வாறு பல செய்யுட்கள் திருமந்திரம் என்ற பெயரைத் தாங்கி ஆன்றோர் உரைகளுமுடைத்தாய்ப் பண்டைக்காலத்துள்ள ஏடுகளிலிருப்பதால் திருமந்திரம் எண்ணுயிரம் பாடல்கள் என்ற கொள்கைக்கு ஒருவாறு இப் பாடல்கள் அரண் செய்வதாயிருக்கின்றன. ஆன்றோர்கள் சிந்தனைக்கு விருந்தாய் இப்பாடல்கள் அமைவதாக,

## மதிப்புரை

பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் பஞ்சவண்ணத் திருத்தொடையல்: ஆசிரியர் பி. மா. சோமசுந்தர முதலியார், பாரிகம்பெனி, ராணிப்பேட்டை விலை 25 காசு.

இவ்வாசிரியர் பாம்பன் சுவாமிகள் பாடிய பரிபூஜன பஞ்சாமிர்த வண்ணம் என்ற வண்ணப் பாடலை அடியொற்றிப் பாடியது இந்நூல். சுவாமிகள் பால், தயிர் நெய், சர்க்கரை, தேன் ஆகிய ஐந்துக்கும் ஐந்து வண்ணப் பாடல் பாடினுர்; அடுத்து, திருத்தொடையல் என்ற தலைப்பில் முப்பது பாடல்கள் அவரே பாடியிருக்கிறுர். மேற்கண்ட நூற்பெயரில் இவ்விரண்டு நூற்பெயர்களும் ஒருங்கு காணப் படுகின்றன. இங்கு, இவ்வாசிரியர் பாம்பன் சுவாமியிடம் தமக்குள்ள பக்தி காரணமாக, அவதாரம், அருட்பேறு' அருளிச்செயல்கள், அயல்மத நிராகரணம், அறுமுகன் அடியிணைப் பேறு என்ற ஐந்து பாடலாகப் பாடியிருக்கிறுர். இக்காலத்தில் தமிழ் இலக்கண அறிவு, யாப்பிலக்கண, அறிவு, சொல்வளம் முதலியன கற்றவரிடத்திலும் கூட மிகவும் குறைந்தேயிருக்கிறது. இந்த நிலையில் இவ்வாசிரியர் சிறப்பாக வண்ணப் பாடல் பாடியிருப்பதை நாம் பாராட்டவேண்டும். நூலின் பின்னர். குமர குருதாசர் பதிகம் சேர்க்கப்பட்டுள்ளது. ஆசிரியருடைய முயற்சியையும் நூலையும் பெரிதும் பாராட்டுகின்றேம். (மு. அ.)

"அட்டவீரட்டத் தலங்களும் அருட் பாடல்களும்"— என்னும் நூல் ஒன்று வரப்பெற்ரேம். இது ஆனி உத்தர வெளியீடாக 13—7—67 அன்று வெளியிடப்பெற்றது' இதனைத் தொகுத்தவர் சிந்தாந்த வித்தகர் கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் ஆவர்.

இந்நூலுள் அட்டவீரட்டத் தலங்கள் பற்றிய குறிப்பும் அங்கங்குபாடப்பெற்ற தேவாரத்திலுள்ளஎல்லாப்பதிகங்களிலும் சில பாடல்களும் தொகுக்கப் பெற்றுள்ளன. பன்னிரு திருமுறை ஓதுவாருக்குப் பயன்படும் வண்ணம் 8 முதல் 12 திருமுறைவரையுள்ள சில முக்கியமான பாடல்களும் பிற்சேர்க்கையாகவுள்ளன இதனைப்போன்று பல்லாயிர வகையில் தொகுப்பு நூல்கள் வெளிவர வேண்டும். தமிழ் மக்களிதனைப் படித்துப் பயன்பெறுவார்களாக. விலை 30 காசுகள். தபாற்செலவு வேறு. கிடைக்குமிடம் க. சோமசுந்தரம் செட்டியார் 23. வேளாளர் வீதி, அமைந்தகரை, சென்னை–29 ஆகும். (அம்பை)

"ஸ்வீடன்பர்க் அவர்களின் "பொன் மொழிகள்" திரு G. ராஜமாணிக்கம் செட்டியார் அவர்களால் ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பெற்றது. விலை 37 பைசா. கிடைக்குமிடம் திரு G. ராஜமாணிக்கம் செட்டி, மிலிடெரி பார்க், காட்பாடி P. O:

இச்சிறுநூல் கிடைக்கப்பெற்றது. ஏறத்தாழ இருநூறு வருடங்களுக்கு முன் ஸ்வீடன் தேசத்தில் ஸ்வீடன்பர்க் எனும் தத்துவ ஞானி வாழ்ந்தார். இவர் இயற்றிய பல நூல்கள் சைவ சித்தாந்தக் கொள்கைகளைத் தழுவியவை. இந்நூல்களில் பலவற்றைக் காலஞ்சென்ற திரு. D. கோபால் செட்டியார் என்பவர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். மேற்குறிப்பிட்ட திரு G. ராஜமாணிக்கம் என்பவர் திரு கோபால் செட்டியார் அவர்களின் திருக்குமாரர் ஆவர். தந்தையார் செய்த பணியைத் தொடர்ந்து இவர் மேற்குறிப்பிட்ட மொழிபெயர்ப்பு நூலை இயற்றியுள்ளார். இந்நூலில் அன்பே சிவம் என்ற சைவசமயக் கொள்கை மிளிர்கின்றது. (கொ. நீ. சி)

"ஐந்தெழுத்து அருமறை" என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இது திருச்சி A.P.A. ஜுவல்லரி உயர்திரு A இராமலிங்கம் செட்டியார் அவர்களின் மணிவிழா நினைவு மலராக 23—5—67 அன்று வெளியிடப் பெற்றது. இம் மலரில் முன்னுரையில் திரு செட்டியார் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பையும் பின் திரு வைந்தெழுத்து பற்றிய ஓர் அழகிய கட்டுரையையும் இறுதியாக ஐந்தெழுத்து பற்றி நம் திருமுறைகளில் காணப்பெறும் சில முக்கியமான பாடல்களையும் காணலாம். ஆரவார நீர்மையோடு மணிவிழா நிகழ்த்தத் தூண்டாது அறிவுப்பணி. சமயப்பணிக்கென ஆற்றுப்படுத்தி நல்ல தொகுப்பினையும் தந்துதவிய தொகுப்பாளர் திருச்சி அருள்நெறித் திருக்கூட்டத் தொண்டர் திரு சொ. கிருஷ்ணன் அவர்கள் முயற்சி போற்றத்தக்கது. இதுயாவரும் படித்துப் பயன்பெறத்தக்க நூல். அனைவரும் பெற்றுப் படிப்பார்களாக விலை குறிக்கப்பெற வில்லை. வேண்டுவோர் சொ. கிருஷ்ணன், செயலாளர், அருள்நெறித் திருக்கூட்டம், திருச்சி, 2. என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். (அம்பை)